# மணிப்பூர் மக்களின் துயரச் சூழலில் நமது சமூக நல்லிணக்க உறுதிமொழி

**02.07.2023**

அன்பு, நீதி, / சமத்துவம், சகோதரத்துவம், / மனித மாண்பு / இவற்றில் வேர்கொண்ட / இந்திய அரசமைப்புச் சட்டத்தையும், / இம்மண்ணையும் / நான் உளமாற நேசிக்கிறேன். / இந்நாட்டு மக்கள் அனைவரும் / என் உடன்பிறப்புகள் / என்று ஏற்றுக்கொள்கிறேன்.

இம்மண்ணின் பன்முகக் கலாச்சாரத்தையும், / அதன் பன்முகப்பட்ட / சமய வாழ்வையும் / பெரிதும் மதிக்கிறேன். / சுதந்திரம், / சமத்துவம், / சனநாயகம், / சமூக நீதி, / சமயச்சார்பின்மை போன்ற / இந்திய அரசமைப்புச் சட்டத்தின் / அடிப்படைகளை / வலுப்படுத்திட உழைப்பேன்.

சாதி, சமயப் பிளவுகளையும், / மோதல்களையும் ஏற்படுத்தும் / அழிவுச் சக்திகளுக்கு / ஒருபோதும் துணைபோக மாட்டேன். / சாதி, சமயங்களைக் கடந்து, / மக்களிடையே / ஒற்றுமையை வளர்க்கவும், / சகோதர உணர்வையும், / சமூக நல்லிணக்கத்தையும் பேணவும் / என் வாழ்நாளெல்லாம் உழைப்பேன்.

மனித உரிமைகளையும், / முழு மனித விடுதலையையும், / சிறுபான்மையினரின் வாழ்வுரிமைகளையும் / வென்றெடுப்பதுடன், / சாதிகளும் / ஆண் பெண் சமத்துவமின்மையும் / ஏற்றத்தாழ்வுகளும், ஒழிந்த / புதிய சமுதாயத்தைக் / கட்டியெழுப்பிடப் பாடுபடுவேன்.

அந்நோக்கில் / சமயச் சார்பற்ற, / சனநாயகச் சக்திகளுடன் / தோழமை கொண்டு, / தன்னலம் பாராமல் / உழைப்பேன் என்றும், / அதற்காக / என் வாழ்நாளில் / எத்தகைய தியாகத்தையும் / மேற்கொள்வேன் என்றும் / உறுதி ஏற்கிறேன்.